**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,
KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.98/2025** |
| Deposition of witness | : | P.W.1 |
| Name | : | கோபிசங்கர் |
| Father's /Husband Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Village | : | காங்கேய நகரம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 38 |
| Occupation | : | ஓட்டுநர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day of September 2025.
A1, A2, A4,A5 present. A3 absent. Petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடியிருந்து காங்கேய நகரத்தில் குடியிருந்து ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி கலையரசனை எனக்கு தெரியும். கடந்த 19.05.2024 ம் தேதி எங்கள் ஊரில் உள்ள மன்மதன் கோவில் திருவிழாவிற்காக ஊருக்கு வந்தேன். மறுநாள் 20.05.2024 ம் தேதி இரவு 07.30 மணியளவில் நான் எனது வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தேன். அப்போது விக்னேஷ், மகேஷ் அங்கு வந்தார்கள். அப்போது எதிரி விக்னேஷ் என்னை பார்த்து தேவிடியா மவனே, குச்சிகாரி மவனே என்று அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார். அவ்வாறு என்னை திட்டியதால் எனக்கு கஷ்டமானது. அப்போது எதிரி விக்னேஷ் என் தங்கச்சிக்கு நீ என்னடா மாப்பிள்ளை பாக்குற என்று சொல்லிக்கொண்டே கீழே கிடந்த ரீப்பரை எடுத்து எனது தலை மற்றும் முதுகில் அடித்தார். அதில் எனக்கு தலையில் லேசான இரத்த காயம் ஏற்பட்டது. அப்போது அங்கு வந்த முத்து என்னை கீழே தள்ளவிட்டார். கீழே விழுந்த என்னை செங்கல்லால் எனது இடது பக்க கண்ணத்தில் அடித்தார் அதில் எனக்கு இடது பக்கத்தில் ஒரு பல் விழுந்தது. அப்போது எதிரி கலையரசன், முத்து ஆகியோர்

என்னை காலால் மிதித்தார்கள் அதை பார்த்து தடுக்க ஓடி வந்த எனது அப்பா கிருஷ்ணமூர்த்தி மற்றும் எனது அண்ணன் செந்தில்குமாரையும் தாக்கினார்கள். எனது அண்ணன் செந்தில்குமாரை ரீப்பரால் அடித்தார்கள். எதிரிகள் அங்கிருந்து போகும் போது எங்களிடம் வைத்துக்கொண்டால் வெட்டி புதைத்து விடுவோம் என்று மிரட்டிவிட்டு போனார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். எனது அண்ணனுக்கு ஏற்பட்ட காயத்திற்காக வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு முதலுதவி சிகிச்சை அளித்து கட்டு போட்டு அழைத்துவந்தோம். நான் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த குடவாசல் போலீசார் என்னை விசாரித்தார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதிலுள்ள விபரங்கள் நான் சொன்னதுதான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

போலீசார் விசாரணையில் எனது அண்ணனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு வலங்கைமான் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற விபரத்தினை சொன்னோ என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் எனது அண்ணனுக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்ற விபரத்தினை மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். அன்றைய தினம் நான் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எனக்கு எவ்வாறு காயம் ஏற்பட்டது என்று மருத்துவரிடம் சொன்னேனா என்றால் சொன்னேன். இந்த விபரத்தினை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். வலங்கைமான் மருத்துவமனையில் நான் பல் விழுந்ததற்கான சிகிச்சையினை பெற்றேனா என்றால் பெறவில்லை. திருவாரூர் மருத்துவமனையில் பெற்றேன். திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு செல்வதற்கு முன்பு குடவாசல் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் சென்றேன். புகார்

எழுதி கொடுத்தேனா என்றால் எழுதி கொடுத்தேன். திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு 21.05.2024 அன்று சென்றேன் என்றால் சரிதான். அதே நாள் மதியம் 01.18 க்கு திருவாரூர் அரசு மருத்துவமனை சென்றேன். என்னை மருத்துவர்கள் பரிசோதனை செய்தார்கள் என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்களை குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான். காயம் எவ்வாறு ஏற்பட்டது யாரால் ஏற்பட்டது என்ற விபரத்தினை குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான். எந்த இடத்தில் எந்த நேரத்தில் ஏற்பட்டது என்பதையும் குறித்து கொண்டார்கள் என்றால் சரிதான். அடையாளம் தெரிந்த மூன்று நபர்கள் மற்றும் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் தாக்கியதாக மருத்துவரிடம் கூறினேன் என்றால் சரிதான். 21.05.2024 அன்று காலை 07.30 மணியளவில் தாக்கியதாக நான் மருத்துவரிடம் சொன்னேன் என்றால் சரியல்ல. நேரம் தவறாக குறிப்பிட்டுள்ளது. நான் மருத்துவரிடம் வாக்குமூலம் கொடுத்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலீசார் 21.05.2024 அன்று மருத்துவமனைக்கு வந்து வாக்குமூலம் பெற்று வந்தார்கள் என்றால் சரிதான். போலீசார் வாக்குமூலத்திலும் தெரிந்த மூன்று நபர்கள் என்றும் அடையாளம் தெரியாத இரண்டு நபர்கள் தாக்கியதாக தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.சா.1 ஆவணத்தில் எல்லா எதிரிகளின் பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். போலீசார் சொல்லி தான் அடையாளம் தெரியாத இரண்டு நபர்களின் பெயர் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் அவர்கள் பெயர் தெரியாது ஆனால் அவர்களை எனக்கு தெரியும் பார்த்துள்ளேன். எனது ஊருக்கும் குடவாசல் அரசு மருத்துமனைக்கு 7 கி.மீ இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். எனது ஊருக்கும் வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு எவ்வளவு இடைவெளி இருக்கும் என்றால் அதே 7 கி.மீ தூரம் இருக்கும். வலங்கைமான் அரசு மருத்துவமனையில் இருந்த போது ஏன் திருவாரூர் அரசு மருத்துவமனை சென்றேன் என்றால் திருவாரூர் அரசு மருத்துவமனையில் ஸ்கேன் வசதி உள்ளது என்பதால் அங்கு சென்றேன். 20.05.2024 அன்று எங்கள் ஊரில் காவடி திருவிழா நடைபெற்றது என்றால் சரிதான்.

திருவிழாவில் மது போதையில் கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தினை எதிரி அடித்ததாக பொய்யாக சொல்லி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் 20.05.2024 அன்று காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்து அதை பொய்யான புகார் என்று நடவடிக்கை எடுக்க மறுத்ததால் போலீசாரை நிர்பந்த படுத்த வேண்டும் என்று திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்ந்து கொண்டேன் என்றால் சரியல்ல. எனக்கு இரத்த காயம் ஏற்பட்டதாக மருத்துவமனை குறிப்பில் இல்லை என்றால் சரியல்ல. நான் 21.05.2024 காலை 10.00 மணிக்கு திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு கிளம்பினேன். எனது அத்தை மகன் காரில் மருத்துவமனைக்கு சென்றேன். பொதுவாக திருவாரூர் அரசு மருத்துவமனைக்கு அரை மணி நேரத்தில் சென்றுவிடலாம் ஆனால் எனது கார் பழுதடைந்தது இருந்ததால் சுமார் 2 மணி நேரத்தில் சென்றேன். எனது அத்தை மகன் 12 மணியளவில் திருவாரூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் இல்லை 1 மணியளவில் சேர்த்தார். அவர் எனக்கு உதவியாக இருந்தார் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் எனது அத்தை மகன் தான் மருத்துவமனையில் சேர்த்தார் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் 21.05.2024 அன்று சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் மீதுள்ள காழ்புணர்ச்சி காரணமாக பொய்யாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. புகாரில் ஊர் மக்கள் அனைவரும் ஓடிவந்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். யார் யார் ஓடி வந்தார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் அந்த நேரம் காவடி சென்று முடிந்த நேரம் என்றால் சரிதான். என்னை எதிரிகள் மிரட்டியதாக யார் யாருக்கு தெரியும் என்று விபரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நானும் எனது குடும்பத்தார்களும் காவடி எடுக்கும் விழாவில் கலந்து கொண்டோம் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொல்லிய விபரங்கள் அனைத்தும் பொய் என்றாலும் காவடி திருவிழாவில் தடுமாறி கீழே விழுந்துவிட்டு தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது புகார் வாக்குமூலத்தில் 1, 2 எதிரிகளின் தங்கையை எனது நண்பர் மணிகண்டன்

பெண் கேட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நானும் மணிகண்டனும் நெருங்கிய நண்பர் என்றால் சரிதான். எங்கள் ஊர் நாட்டாமை பிரபு ஆவார் அவரிடம் பெண் கேட்டதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். போலீசார் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். நானும் மணிகண்டனும் இன்றுவரை நன்றாக தான் பழகி வருகிறோம் என்றால் சரிதான். 1வது எதிரி தங்கை கார்த்திகா மீது கோயம்புத்தூரில் பணம் கொடுக்கல் வாங்கல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பொதுவாக காதலித்த பெண் மீது வழக்கு எதுவும் தாக்கல் செய்ய மாட்டார்கள் என்றால் சரியல்ல. 20.05.2024 அன்று மாலை 06.00 மணிக்கு நானும் மணிகண்டனும் 1வது எதிரியின் வீட்டிற்கு சென்று தகராறு செய்தோம் என்றால் சரியல்ல. நான் 1வதுஎதிரியின் தங்கையை தவறாக படம் எடுத்து அவரை மிரட்டினேன் என்றால் சரியல்ல. இதை பொறுத்து ஊரில் பஞ்சாயத்து ஏற்பட்டது என்றாலும் அதனால் என்னை ஊரிலிருந்து ஒதுக்கி வைத்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் செங்கல்லால் அடித்து பல் விழுந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பிரச்சனையை ஊரில் புகார் கொடுத்து பெண் பிரச்சனை என்பதால் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக சமாதானமாக ஒத்துக்கொண்டு எனது நண்பருக்கு பெண் கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக நான் மருத்துவனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.30 15:59:52 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.